ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதிவிசேஷமானது

අංක 2255/20 - 2021 නොවැම්බර් මස 24 වැනි බදාදා - 2021.11.24
2255/20 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ (1) ஆம் பிரிவின் கீழ் திருகோணமலை நகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

*திருகோணமலை நகர சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவி, இறப்பெய்தியமை காரணமாக வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும்;*

*மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ (1) ஆம் பிரிவின் கீழ், திருகோணமலை நகர சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட சபுர்தீன் சனூன் என்பவர் அங்கம் வகிக்கின்ற ஐக்கிய தேசியக் கட்சி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான திருகோணமலை நகர சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;*

*மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக அப்துல் ரசீர் முஹமட் பௌசி என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும்;*

*திருகோணமலை நகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான சங்கரப்பிள்ளை சுதாகரன்ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262ஆம் அத்தியாயமான) 66அ (1) ஆம் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு அப்துல்*

1A – G35417 –40(2021/11)

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

ரசீர் முஹமட் பௌசி என்பவர் திருகோணமலை நகர சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**சங்கரப்பிள்ளை சுதாகரன்,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
திருகோணமலை நகர சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
திருகோணமலை,
2021, நவெம்பர் 23.

12-112

---

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ (1) ஆம் பிரிவின் கீழ் கிண்ணியா பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கிண்ணியா பிரதேச சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட உறுப்பினர் ஒருவரின் பதவி, கேட்டு விலகியமை காரணமாக வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ (1) ஆம் பிரிவின் கீழ், கிண்ணியா பிரதேச சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட அபுல்ஹஸன் முகம்மது பாசிது என்பவர் அங்கம் வகிக்கின்ற ஐக்கிய தேசியக் கட்சி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 09 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான கிண்ணியா பிரதேச சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக அப்துல் மஜீது சாலீகு லெப்பே என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும்;

கிண்ணியா பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான சங்கரப்பிள்ளை சுதாகரன்ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262ஆம் அத்தியாயமான) 66அ (1) ஆம் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு அப்துல் மஜீது சாலீகு லெப்பே என்பவர் கிண்ணியா பிரதேச சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**சங்கரப்பிள்ளை சுதாகரன்,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
கிண்ணியா பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
திருகோணமலை,
2021, நவெம்பர் 23.

12-113

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ (1) (அ) ஆம் பிரிவின் கீழ் பஸ்கொட பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

பஸ்கொட பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி, இறப்பெய்தியமை காரணமாக வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ (1) (அ) என்னும் பிரிவின் கீழ், பஸ்கொட பிரதேச சபையின் இலக்கம் 14, ரொடும்ப வட்டாரத்திற்கு தெரிவு செய்யப்பட்ட கம்மெதகம ஞாணீஸ்ஸர தேரர் என்பவர் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான பஸ்கொட பிரதேச சபையின் இலக்கம் 14 ரொடும்ப வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக எகொடஹேவாகே சந்திம கீர்த்தி பிரதீப் என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும்;

பஸ்கொட பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான தானந்திரி விதானகே போஷிதா கௌமதி ஆகிய நான் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262ஆம் அத்தியாயமான) 66அ (1)(அ) ஆம் பிரிவின் நியதிகளின் படி செயற்பட்டு எகொட ஹேவாகே சந்திம கீர்த்தி பிரதீப் என்பவர் பஸ்கொட பிரதேச சபையின் இலக்கம் 14 ரொடும்ப வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**டீ. டபிள்யூ. போஷிதா கௌமதி,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
பஸ்கொட பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
மாத்தறை மாவட்டம்,
2021, நவெம்பர் 23.

12-119

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.